**பாணந்துறை நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாணந்துறை நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள பாணந்துறை நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் ஆண்டின் மிகைக்காக தாக்கங்களை ஏற்படுத்துகின்ற கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரம் சீராக்கமாக குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் திரண்ட நிதியத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்னைய ஆண்டின் சீராக்கங்களின் தேறிய பெறுமதி ரூபா 13,129,264 தொகை காண்பிக்கப்பட்டமையால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டிற்கான பெறுவனவுகள், கொடுப்பனவுகள் ஆண்டின் வருமானமாக அல்லது செலவினமாக சீராக்குதல் பொருத்தமற்றதாக இருந்தமையால் முன்னைய ஆண்டின் சீராக்கமாக காண்பிக்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய பெறுவனவுகள், கொடுப்பனவுகள் மாத்திரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நியமத்தின் 6.3 ஆம் பிரிவின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் 06 ஏக்கர் 26.57 பேர்ச் உடைய 16 காணிகளின் பெறுமதி இனங்காணப்படாதிருந்ததுடன் அந்தக் காணிகளில் உள்ள கட்டிடங்களின் கிரயம் ரூபா 11,537,032 மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த 16 காணிகள் தொடர்பான மதிப்பீட்டுப் பெறுமதி பெறப்பட்டுள்ளதுடன் 2101 பதிவேட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. | காணி மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | நியமத்தின் 6.10 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு கணிப்பிடும் போது சொத்துக்களின் இழிவுப் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் சொத்துக்களின்கிரயத்தின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு சீராக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களின் இழிவுப் பெறுமதியை மதிப்பிடுதல் பிரயோக ரீதியில் பிரச்சினைகளுடன் உள்ளது. | உள்ளூராட்சி நிறுவனங்களுக் கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேல் மாகாண சபை அமுல்படுத்திய நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் கிடைக்கப் பெற்ற ரூபா 514,091 மூலதன மானியமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தாமத வழுவின் அடிப்படையில் ஏற்பட்டிருந்ததுடன் இந்த ஆண்டின் போது மூலதனமாக்கப்படும். | ஆண்டிற்குரிய மூலதன மானியம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது நிர்மாணப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்து சென்றதன் அடிப்படையில் ஒப்பந்தக்காரர்களால் நிர்மாணங்களை கையேற்றல் நிராகரிக்கப்பட்ட 04 செயற்திட்டங்களுக்காக ரூபா 3,136,627 கடன்கொடுத்தோர் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | நிர்மாணிக்க முடியாதிருந்ததாக உரிய சங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | அமுல்படுத்தப் படாத செயற் திட்டங்களுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு ஒதுக்க முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | புத்த சாசன சமய மற்றும் கலாசரா அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 2021 பெப்ரவரி 10 ஆந் திகதிய CA/06/02/DO1/NFC ஆம் இலக்க கடிதத்தின் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களினால் திரைப்பட மண்டபத்திலிருந்து அறவிட வேண்டிய களியாட்ட வரி 02 வருடங்கள் வரையும் அறவிடாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டிற்காக ரூபா 600,000 களியாட்ட வரி சிட்டையிடப்பட்டதன் காரணமாக வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | வருமானத்திலிருந்து அகற்றுவதற்கான தீர்மானம் எடுக்கும் வரை உள்ளூராட்சி திணைக்களத்திற்கு வழங்க முடியாது. | உரிய தீர்மானத்தின் பிரகாரம் களியாட்ட வரிக்காக சிட்டையிட முடியாது. |
| (ஈ) | பாணந்துறை நகர சபை எல்லையில் வேக்கடயில் அமைந்துள்ள 02 றூட் 28.47 பேர்ச் உடைய குனுகொட்டுவவத்த நொகொத்துலுமண்டலாள வத்த காணியின் பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணியின் பெறுமதியை தீர்மானிப்பதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | காணியின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது மீள் மதிப்பீட்டின் மூலம் நூலக புத்தகங்களின் சரியான பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 சனவரி 01 ஆந் திகதி முதல் மீள் தடவையில் நிலையான சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டமையால் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை | நூலக புத்தகங்கள் மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | 2021 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட கிரயம் ரூபா 14,868,625 ஆன நூலகப் புத்தகங்களுக்காக மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,486,863 ஆன பெறுமானத்தேய்வு பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | நூலகப் புத்தகங்களில் பெறுமானத்தேய்வு செய்யும் போது பொதுப் பெறுமதியின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்ய முடியாதிருந்தமையால் நடைமுறைப் பிரச்சினைகளின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்படவில்லை. | நூலக புத்தகங்கள் பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டில் களஞ்சியத்திற்கு கிடைக்கப் | சரி செய்வதற்கு குறிப்பிட்டுக் | களஞ்சியத்திற்கு கிடைக்கின்ற |

| | | | |
|---|---|---|---|
| | பெற்ற ரூபா 8,990 தொகையான 01 கெபின் பேன் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கொள்கின்றோம். | நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஏ) | 2021 யூன் 25 ஆந் திகதி சபைக்கு கிடைக்கப் பெற்ற 02 புகைப்பிடிக்கும் இயந்திரத்தின் VAT உடன் பெறுமதி ரூபா 349,920 ஆக இருந்த போதும் அது ரூபா 324,000 ஆக அதாவது ரூபா 25,920 ஆன VAT தொகையின்றி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | 2021 மார்ச் 31 ஆந் திகதி களஞ்சியத்திற்கு கிடைக்கப் பெற்றிருந்த High Pressure Grease Injector இயந்திரத்தின் பெறுமதி ரூபா 25,250 ஆக இருந்த போதும் ரூபா 27,550 ஆக அதாவது 2,300 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஒ) | 2020 ஆம் ஆண்டில் செலவினத் தலைப்பில் வரவு வைத்து கடன்கொடுத்தோர் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,075,237 தொகையான நிலையான சொத்துக்களை மூலதனமாக்கும் போது முன்னைய ஆண்டின் மிகைக்குரிய வழுவை சரி செய்யும் போது திரண்ட நிதியத்தில் செலவு வைப்பதற்கு பதிலாக ஒதுக்கம் மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவுகளை பெற்று சரிசெய்யப்படும் என குறிப்பிடுகின்றோம். | முன்னைய ஆண்டில் இடம்பெற்ற வழுவை திரண்ட நிதியத்தின் ஊடாக சரிசெய்தல் வேண்டும். |
| (ஓ) | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய புத்தகப் பெறுமதி காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் கிரயம் ரூபா 128,179,133 வரை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் | எதிர்வரும் ஆண்டின் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய புத்தகப் பெறுமதி நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்படும். | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய புத்தகப் பெறுமதி சொத்துக்கள், பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமானத்தேய்வு ஒதுக்கீட்டுக் கணக்கின் மீதி ரூபா 5,229,360 நடைமுறையல்லா பொறுப்பாக தனியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (ஔ) | உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் ஒதுக்கம் மற்றும் ஏற்பாடுகளை பதிவதற்கு தனியான நிரலொன்று பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் ஒதுக்கம் மற்றும் ஏற்பாட்டுக் கணக்கில் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் முறையே ரூபா 101,150,440 மற்றும் ரூபா 103,234,459 தொகைகள் திரண்ட மிகையில் சேர்த்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் போது ஒதுக்கம் மற்றும் ஏற்பாடுகள் தனித்தனியான நிரலின் கீழ் பதியப்படல் வேண்டும். | உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் ஒதுக்கம் மற்றும் ஏற்பாடுகள் தனியாக காண்பிக்கப்படல் வேண்டும். |
| (க) | நகர அபிவிருத்தி அதிகார சபை சேமிப்புக் கணக்கிற்குரிய 2021 ஆம் ஆண்டில் கிடைத்த வட்டி வருமானம் ரூபா 116,763 தொகை நிகழ்ச்சித் திட்ட இலக்கம் 04 இன் பௌதீக திட்டமிடலின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது நிகழ்ச்சித் திட்ட இலக்கம் 02 சேவை மற்றும் வரியின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் வட்டி வருமானங்களை பௌதீக திட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காண்பிக்கப்படும். | வட்டி வருமானம் உரிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (கா) | பொதுச் சந்தை நிர்மாணிப்பதற்காக 1993 நவம்பர் 08 ஆந் திகதி தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்ட ரூபா 1,000,000 முற்பணம் தொகையை தீர்ப்பதை உறுதிப்படுத்திய ஆவணத்தின் பிரகாரம் ரூபா 935,671 தொகையை பதிவழிப்பதற்காக 2019 மே 02 ஆந் திகதி பொதுச் சபை பொதுக்கூட்ட பரிந்துரை கிடைத்திருந்த போதிலும் அதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படாமை காரணமாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த தொகையை பதிவழிக்காதிருந்ததுடன் 28 | இந்த தொகையை பதிவழிப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | முற்பணத் தொகையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வருடங்கள் முதல் கிடைக்க வேண்டிய முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 63,731,152 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 37,752,935 ஆகும்.

### 2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஒட்டுமொத்த ஆதனவரி நிலுவை ரூபா 43,648,051 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் காணப்படுகின்ற நிலுவை ரூபா 39,600,784 தொகையும், 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் காணப்படுகின்ற நிலுவை ரூபா 2,614,687 மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற நிலுவை ரூபா 1,432,580 ஆகும். | நிலுவையில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடல் வேண்டும். |
| (ஆ) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2018 முதல் 2021 ஆம் ஆண்டு வரை கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 107,747,530 ஆக இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டண பட்டோலை தயாரித்து மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் | கொரோனா தொற்றுநோயின் காரணமாக பட்டோலைகள் தயாரிப்பதற்கு முடியாதிருந்தது. | பட்டோலைகளை விரைவாகத் தயாரித்து முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 04 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கொவிட் தொற்றுநோய் காணப்பட்ட காலத்தில் நகர எல்லையில் கடமையில் ஈடுபட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குதல் மற்றும் நோயாளர்களை கொண்டு செல்வதற்காக வாடகை அடிப்படையில் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு 2021 மே 21 ஆந் திகதி பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறப்பட்ட வாகனமொன்று பொதுச் சுகாதார பரிசோதகருக்கு வழங்கப்படாமல் செயலாளர் பதவிக்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு வீட்டிலிருந்து அலுவலகம் வருவதற்கும் செல்வதற்கும் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக 2021 யூன் முதல் திசெம்பர் வரை வாடகையாக ரூபா 562,800 தொகையும், எரிபொருளுக்காக ரூபா 178,356 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான கெப் வண்டி பொதுச் சுகாதார பரிசோதகருக்கு கொவிட் நடவடிக்கைகளுக்காக வழங்கியதன் காரணமாக செயலாளரின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக வாடகை அடிப்படையில் மோட்டார் வாகனமொன்றை சந்தை விலை ஒப்பீட்டு முறையின் அடிப்படையில் பெற்று வழங்கப்பட்டிருந்தது. | போக்குவரத்து வசதிகளை வழங்கும் போது அரச நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் சபை தீர்மானங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |